## சபையை ஒருபோதும் அற்பமாய் எண்ணாதிருங்கள்

*-J.C.Choate*

எப்போதாவது ஒரு சபையைப்போலவே மற்ற சபையும் நல்லது தான் என்று ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறீர்களா? அல்லது நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு எந்த ஒரு சபையிலும் அங்கத்தினராக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. நீங்கள் மனந்திரும்பி பாவ அறிக்கை செய்து ஜெபித்தாலே போதும். நீங்கள் இரட்சிக்கப்பட்டு விடுவீர்கள் அல்லது மிக மோசமான நிலை என்னவென்றால் நன்கு வசனத்தின்படி அமைக்கப்பட்ட ஒரு சபையை அற்பமாக கேலிபேசி அதை ஒரு வேஷம் ஏனென்றால்; உலக மதவட்டாரங்களின் போதனைகள் மற்றும் பழக்கவழக்கங்களில் அநேக பிரிவினைகளாலும் மற்றும் போதனைகளிலுள்ள குழப்பங்களாலும் இப்படிச் சொல்லுகிறீர்களா?

நீங்கள் சபையைக் குறித்த நிராகரிக்கும் சிந்தையில் மூழ்குமுன் என்னோடுகூட ஒரு கணம் சிந்தியுங்கள். சபை என்பது **கிறிஸ்துவின் மணவாட்டி** என்று அழைக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியுமா? உலகம் முழுவதும் திருமணம் என்பது எல்லோராலும் நன்கு புரிந்து கொள்ளப்பட்ட பொதுவான ஒன்று. ஒரு பெண்ணை தேர்ந்தெடுக்கிறான், அவளை திருமணம் செய்து கொள்ளுகிறான். அவளை நேசித்து, அவளை பாதுகாக்கவே வாழ்ந்து, தேவைகளை சந்தித்து வாழ்கிறான். தேவைப்பட்டால் அவளை பாதுகாக்க தன் உயிரையும் கொடுக்கிறான். அவசியமாக அவளைப் பிரிய நேர்ந்தால் மறுபடியும் அவளிடம் திரும்ப வருவதே அவனுடைய பிரதான சிந்தனையாக இருக்கும்.

கிறிஸ்துவின் மணவாட்டியாக, சபையானது கிறிஸ்துவின் சபையாயிருக்கிறது. அந்த ஐக்கியத்தின் பிள்ளைகள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். சரீரப்பிரகாரமாக நடக்கும் திருமணங்களில் எப்படி மனைவி எண்ணற்ற மற்ற ஆண்களின் பெயரை இணைத்துக்கொள்ள எந்த கணவனும் அனுமதிக்கமாட்டானோ- மணவாட்டி - அதாவது சபை - கிறிஸ்துவின் சபை தன்னுடைய மணவாளனின் பெயரையே தரித்துக்கொள்ள வேண்டும். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் **வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை** என்றான் (அப்.4:12). அந்தியோகியாவில் முதன் முதலில் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்பட்டது (அப்.11:26).

மணவாட்டி தன் கணவனில் அன்பு கூர்ந்து கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் (யோவா.14:15). இது தெளிவாக கலாத்தியர் 1:8-ல் வலியுறுத்தி சொல்லப்படுகிறது. "... நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்". இந்த வேதவசனத்துக்கு மனிதர்களால் உருவாக்கப்பட்ட சபைகளை ஆளும்படி ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள் முற்றிலும் எதிராயிருக்கிறது.

மனிதர்களின் திருமணத்திற்கும் கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள திருமணத்திற்கும் உள்ள சமன்பாடு எபேசியர் 5:22,23-ல் அழகாக விளக்கப்படுகிறது. அங்கே சபையை நேசித்து அவருக்குக் கீழ்படிய வேண்டிய அவசியம் என்று ஆழமாக குறிப்பிடப்படுகிறது. கிறிஸ்து சபையை எப்படி நேசித்தாரோ அப்படியே கணவனும் மனைவியை நேசித்து கிறிஸ்து எப்படி சபைக்காக தன் ஜீவனையே கொடுத்தாரோ அந்த அளவுக்கு நேசிக்க வேண்டும் என்பது தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இந்த உறவானது வார்த்தையில் இவ்விதமாக கூறப்பட்டுள்ளது. "அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து,... **சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்து** தாம் அதை **திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்** (ஞானஸ்நானம்) (வேதவசனத்தின்படி கொடுக்கப்படுவது) **அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும்** தன் மணவாட்டியை தன்னோடு வைத்துக் கொள்ள மறுபடியும் வருகிறார்.மகிமையுள்ள சபையாக (ஒரே சபை ஆயிரக்கணக்கான பிரிவினை சபையாரல்ல) கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்".

கிறிஸ்துவுக்கும் சபைக்கும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள சமன்பாட்டை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது சபைக்கும் அதன் மணவாளனுக்கும் இடையே உள்ள விசேஷித்த உறவை புரிந்துகொள்ள முடியும். எந்த சபைக்காக சிலுவையில் தன் ஜீவனைக் கொடுத்தாரோ அந்த சபையை யாராவது கேலி செய்தாலோ அல்லது சிறுமைப்படுத்தினாலோ அவர் பெரிதும் கோபமடைவார். சரீரமான சபைக்காக தம் ஜீவனையே சிலுவையில் கொடுத்தார் அந்த இரத்தம் சபையை பரிசுத்த அமைப்பாக்குகிறது. அது ஆவிக்குரிய சரீரமாக நேசிக்கப்படவும், கனம்பண்ணப்படவும் வேண்டும். அதற்கு ஆவிக்குரிய தலையாக கிறிஸ்து இருக்கிறார்.

ஆனால் மத நம்பிக்கை தொடர்பான உலகில் அநேகர் சபையை மனிதனால் உண்டாக்கப்பட்ட நிறுவனமாக்கி அதன் முக்கியத்துவத்தை ஒன்றுமில்லாமலாக்க முயற்சிக்கிறார்கள். நீங்கள் பரலோகம் செல்ல வேண்டுமானால் சபையில் ஒரு அங்கத்தினராககூட இருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லுவார்கள். இந்த பிரிவினைகளையெல்லாம் நியாயப்படுத்தும்படி, எல்லா பிரிவினை சபைகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தால் வேதத்தில் சொல்லப்பட்ட சபையை நாம் காணமுடியும் என்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றவர்கள் யோவான் 15-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டபடி கிறிஸ்து திராட்சச்செடி பல பெயரிலுள்ள சபையெல்லாம் அதன் கிளைகள் என்று சொல்லுகிறார்கள்.

இந்த சபைகளில் சில தங்கள் நிறுவனர்களின் பெயரையும் சிலர் தாங்கள் தொழுது கொள்ளுகிற குறிப்பிட்ட ஒரு நாளின் பெயரிலும் வேறு சிலர் தங்களுக்கு விசித்திரமாய்த் தோன்றுகிற நம்பிக்கை அல்லது நடைமுறைகளின் பெயரிலும் தங்களை அழைத்துக் கொள்ளுகிறார்கள். இந்த சபைகள் எல்லா வகையான அங்கத்தினர்களையும் கொண்டு அவர்கள் பல வழிகளில் தொழுது கொள்ளுகிறார்கள் (சில தொழுகையைக் காட்டிலும் பொழுது போக்கு நிகழ்ச்சியைப்போல் இருக்கிறது) அவர்கள் கற்பனை செய்யக்கூடியவைகளையும், செய்யக்கூடிய யாவற்றையும் போதிக்கிறார்கள். இதில் மிகவும் ஆச்சரியமானதொன்று என்னவென்றால் வேதவசனங்களில் பெரும்பாலும் ஆதாரமில்லாதவைகளை செய்கிற இவர்கள் அவைகளை கிறிஸ்துவின் நாமத்தில் செய்வதோடு கர்த்தர் இப்படி மாறுபட்ட போதனைகளுக்கும் நடை முறைகளுக்கும் அங்கீகாரம் கொடுப்பார் என்று நம்புகிறார்கள்.

கர்த்தரையும் அவருடைய வழிகளையும் கேலிக்கூத்தாக்குவது கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு எவ்வளவு துக்கமான ஒன்று. அவருடைய போதனைகளில் முக்கியத்துவத்தைக் குறைத்து சபைக்காக அவர் செய்த தியாகத்தை சிறுமைப்படுத்துகிறார்கள். மனிதன் இப்படி உண்மைகளை புரட்டிப் போட்டதினால் நன்கு அமைக்கப்பட்ட பக்தி மார்க்கம் அநேகருக்கு ஒரு நகைப்புக்குரிய ஒன்றாக இருக்கிறது. இந்த பிரிவினைகள், குழப்பங்கள் மற்றும் முரண்பாடுகள் காரணமாக உலகத்தில் அநேகர் கடவுள் நம்பிக்கையையே நிராகரித்து விட்டனர்.

மத நம்பிக்கையில் உள்ள இத்தனை ஊழல்கள் குறித்து ஒன்றும் வேடிக்கையானதல்ல. கடவுள் நம்பிக்கையில் தப்பான வழியிலுள்ளவர்கள் யாவரும் தங்களை இழந்து போவார்கள் ஏனென்றால் அவர்கள் தேவனுடைய வார்த்தையோடு எதையாகிலும் கூட்டுகின்றனர் அல்லது அதிலிருந்து எடுத்துவிட்டனர் (வெளிப்படுத்தல் 22:18,19) அவர்கள் தங்கள் கள்ளபோதனைகளை பின்பற்றும்படி கவரப்பட்ட எண்ணற்ற மக்களும் தங்கள் ஆத்துமாக்களை இழந்து போவார்கள் மத்தேயு 7:21-23-ல் இயேசுவானவரே எச்சரிக்கிறார்; "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்".

கர்த்தரிடத்திலும் அவருடைய சபையிலும் அல்லது அவருடைய எந்த போதனையிலும் குற்றங்காண்பவர்கள் அதைக் குறித்து துக்கிக்கவே வாழ்வார்கள் மெய்யாகவே அதற்காக துக்கப்படவே மரிப்பார்கள் இது ஒன்றும் வேடிக்கையல்ல.


மேலும் விபரமறிய தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

Church of Christ
P.O.Box 5, Batlagundu -624 202
SOUTH INDIA
Phone:04543 263 278
Cell:94435 58041


Tamil Tract No.44

# Don't Ever Belittle the Church

J.C. Choate



## சபையை ஒருபோதும் அற்பமாய் எண்ணாதிருங்கள்

ஜே.சி.சோட்


*Published by*
**World Evangelism Tracts**
**P.O.Box 5, Batlagundu -624 202, South India**
Request a Free Bible Correspondence Course
**Presented by the Church of Christ**